**கவனிக்க.**– *2007.03.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1490 - 2007 මාර්තු 23 වැනි සිකුරාදා - 2007.03.23

*1490 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 189 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் துப்பாக்கியாளர் தொழில் துறையில், வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் கோரப்பட் டுள்ளன.

1. (அ) **தேவைப்படும் கல்வித் தகைமை**.-க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (கணிதம்/ விஞ்ஞானம் உட்படுத்தப்படுமாயின் 1999-2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II /விஞ்ஞானம் II)

(ஆ) **ஏனைய தகைமைகள்**.- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) *தேசிய இனம்* .- ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) *வயது* - 2007, மே 20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(3) *உயரம்* .- 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.
(4) *உடல் நிறை*.- உடற் பருமன் சுட்டி (BMI) = நிறை (கி. கி.)/உயரம் (மீ)$^2$ < 25
(5) *மார்பு* .- ஆண் 32" குறைந்தது.
(6) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்* .- CP2
(7) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)
(8) *குடியியல் நிலை* .- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான் படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள். பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 1 (அ) இல் தேவைப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்டிராதவர்களும் பந்தி 1 (ஆ) இல் தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவு செய்யப்பெறும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுத்தல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் (இரண்டாம் அல்லது மூன்றாம் தர) வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். 5 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 7 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுமாறு அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் மேலும் சேவையை நீடித்துக்கொள்வதற்கு, தகுதியான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**-

(1) *சம்பள விகிதங்கள்*.- ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| *வானூர்தியாளர்* | : ரூபா 1,66,560 - 7 x 1,440 - 10 x 1,800 - ரூபா 1,94,640 |
| *முன்னனி வானூர்தியாளர்* | : ரூபா 1,70,880 - 4 x 1,440 - 11 x 1,800- ரூபா 1,96,440 |
| *கோப்ரல்* | : ரூபா 1,75,200 - 1 x 1,440 - 13 x 1,800 - ரூபா 2,00,040 |

*சார்ஜன்ட்* : ரூபா 1,78,440 - 10 X 1,800 - 2 X 2,520- 1 X 3,480 - ரூபா 2,04,960

*பிளைட் சார்ஜன்ட்* : ரூபா 1,82,040 - 8 X 1,800 - 2 X 2,520- 3 X 3,480 - ரூபா 2,11,920

*அதிகாரம் பெற்ற அலுவலர்* : ரூபா 1,89,240 - 4 X 1,800 - 2 X 2,520- 9 X 3,480 - ரூபா 2,32,800

(ஆ) *வேறு கொடுப்பனவுகள் :*

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 1,375

(2) *கடினப்படி*- மாதமொன்றுக்கு ரூபா 600.

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1,900 வழங்கப்படும்.

(4) *விசேட கடினப்படி*- விஷேட கொடுப்பனவு யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2400 வழங்கப்படும் .யாழ் குடாநாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதமும் கொடுப்பனவு வழங்கப்படும்.

(5) *உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.*- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக் கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து ரூபா 850 வரை)

(6) *உணவு கொடுப்பனவு.*- வெளியில் தங்கும் வான்படை வீரருக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 ( உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவச உணவு வசதி)

(7) *தங்குமிட வசதி.*- உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவசம்.

(8) *பிரயாணம்.*- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரருக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவின மீளளிப்பு

(9) *கலவரகாலப்படி.*- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போதுஇக் கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்).

(10) *தகைமைச் சம்பளம்.*- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும்.

(11) *நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.*- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும்.

(12) *சீருடை கொடுப்பனவு.*- மாதமொன்றக்கு ரூபா 170 வழங்கப்படும்.

(13) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்.*- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர்.

(14) *மருத்துவம்.*- வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமானவராயின் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்யப்படும்.

(15) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (48 கீ. மீ.) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேருந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்

(16) விவாகமான வான்படை வீரருக்கு அரசாங்கத்திற் குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இலிருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(17) *விரிவுரையாளர் கொடுப்பனவு.*- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(18) *வேறு கொடுப்பனவுகள்.*- (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(19) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் கோவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

6. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விபரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2007, மாச்சு மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "தலைவர், ஆள்திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொடை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீரர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொடை, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபைகளில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்:-

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித் தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச்சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பகாரரின் தொழில் தருநரிடமிருந்து, (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. நேர்முகப் பரீட்சை இலங்கை வான்படை கொழும்பு நிலையத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு தோற்றுதல் வேண்டும். விண்ணப்பக் காரர்களுக்கு தேதி, நேரம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

10. விண்ணப்பக்காரரொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்கவிரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

14 . நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டப். டி. ஆர். எம். குணதிலக,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

*வான்படை வீரருக்கான விண்ணப்பம்*

1. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டைப்படி) :----.

2. தேசிய அடையாள அட்டை இல. :----.

3. அஞ்சல் முகவரி :----.

4. நிரந்தர முகவரி :----.

5. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

6. மாவட்டம் :----.

7. தேர்தற் தொகுதி :----.

8. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

9. தொலைபேசி இலக்கம் :----.

10. பிறந்த தேதி :- ஆண்டு:---- மாதம்:---- திகதி:----.

வயது: 2007.05.20 ஆந் திகதி அன்று உள்ளவாறு : வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

11. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.

12. உயரம் : ...........அடி ...........அங்குலம்

13. க. பொ. த. (சா.த.) பரீட்சை :-

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

14. க. பொ. த. (உ.த.) பரீட்சை :-

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

15. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :----.

16. விளையாட்டுத்துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :----.

17. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

18. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

19. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :----.

20. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

21. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற் றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக் கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

3-621

---

**சமய விவகார மற்றும் பண்பாட்டு அபிவிருத்தி அமைச்சு**

பௌத்த அலுவல்கள் திணைக்களம்

**மோட்டார் வாகன சாரதி - II ஆ பதவி**

சமய விவகார மற்றும் பண்பாட்டு அபிவிருத்தி அமைச்சின் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள சாரதி II ஆ ஆம் பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி எண்ணிக்கை.**- 01

2. **பதவிக்கான தகைமைகள் :**

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2 பதவிக்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்தினத்தன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரிவோருக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருத்தமற்றது.

2.3 கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் ஆகக் குறைந்தது எட்டாம் வகுப்பு/ஒன்பதாம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2.4 தனியார் அல்லது கூலி 24 அந்தருக்குக் குறைவான ஸ்டேசன் வெகன் வாகனம் ஓட்டுவது தொடர்பாக வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட, தொழிற்தகைமை பற்றிய சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டும். (இணைத்துக்கொள்ளப்படும் தினத்தன்று மூன்று வருடங்களுக்கு முன்னர் குறித்த சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும்)

2.5 வாகன சாரதியாக மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

2.6 ஆகக் குறைந்தது 5 அடி 2 1/2 அங்குல உயரமுடையவராக இருத்தல் வேண்டும்.

2.7 பகல் மற்றும் இரவு வேளைகளில் கடமை புரிவதற்காக பொருத்தமான உடலமைப்பைக் கொண்டிருப்பதோடு, சிறந்த கண்பார்வையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.8 பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதுமான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை.**- இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது, முதல் மூன்றாண்டு காலம் தகுதிகாண் காலமாக அமையும்.

4. **சேவை நிபந்தனை.**- இப்பதவி நியமனம், அரச சேவையின் வாகன சாரதிகளுக்கான ஒன்றிணைந்த சாரதி யாப்புக் கோவையின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளின் மூலம் நிர்வகிக்கப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- மேற்குறித்த தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள், மூன்று அதிகாரிகளுக்குக் குறையாத சபை மூலம் நடத்தப்படும். வாகனமோட்டும் திறமையை வெளிப்படுத்தும் பரீட்சையொன்றுக்கு சமூகமளிக்க வேண்டும். அத்துடன் அப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர், நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படுவார். முறையான நியமனக் கடிதம் ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகம் அவர்கள் மூலம் வழங்கப்படும்.

6. **சம்பள அளவுத்திட்டம்.**- மாதமொன்றுக்கு ரூபா 12,360 - 10 x 110 - 10 x 120 - 10 x 130 - 12 x 140 - 17,640. (அரச நிர்வாக சுற்று நிருபம் 6/2006 இற்கமைய)

7. **விண்ணப்பிக்கும் முறை.**- இவ்வறிவித்தலில் அடங்கியுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2007.04.10 ஆந் திகதிக்கு முன்னர் "பௌத்த மத திணைக்களம், இல. 135, தர்மபால மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சாரதி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் கீழ்க்குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ்
(2) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
(3) கல்வித் தகைமைச் சான்றிதழ்
(4) அண்மையில் பெறப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தரின் சான்றிதழ்
(5) அண்மையில் பெறப்பட்ட நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டு.

எச். டபிள்யூ. டீ. சுனில்,
பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம்.

பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7,
2007.03.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமய விவகார மற்றும் பண்பாட்டு அபிவிருத்தி அமைச்சு**

பௌத்த அலுவல்கள் திணைக்களம்

மோட்டார் வாகன சாரதி - II ஆ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   1.1 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.
   1.2 தேசிய அடையாள அட்டை இல. :-----.

2. நிரந்தர முகவரி :-----.

3. பிறந்த திகதி :- ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

   3.1 2007.04.10 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. இனம் :-----.

5. கல்வித் தகைமை :-----.
(பெற்றுள்ள ஆகக் கூடிய தகைமையைக் குறிப்பிடுக)

5.1 அனுபவம் :-----.

5.2 பெற்றுள்ள வாகன சாரதி அனுமதிப்பத்திர வகை :-----.

6. நீங்கள் நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? பதில் ஆம் எனில் விபரம் தருக :-----.

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப, மேற்குறித்த தகவல்கள் உண்மையானவை என்றும் தவறற்றவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். எவ்வகையிலும் மேற்குறித்த தகவல்கள் உண்மையற்றவை என உறுதிப்படுத்தப்படுமாயின், எனது விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்பட நேரும் என்பதையும், பதவியில் இணைத்துக்கொண்ட பின்னர் அங்ஙனம் உறுதிப்படுத்தப்படுமாயின் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்பட நேரும் என்பதையும் நான் அறிவேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

03-695

---

**உள்நாட்டு வைத்திய அமைச்சு**

இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்

ஆயுள்வேத திணைக்களத்தின் வைத்திய அலுவலர்களின் வகுதியில் ஆரம்ப தரததின் வைத்திய அலுவலர்கள் பதவிசார்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 13" x 18" அளவுடைய தாளில் தயாரித்து 20.04.2007 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடிதவுரையின் மேல் மூலையில் "இலங்கை ஆயள்வேத வைத்திய சேவைப் பதவி" என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**வேதனத்திட்டம் :**

(i) *பட்டதாரிகளுக்கு:* (பொது நிருவாக சுற்று நிரூப இல. 6/2006 இல் SL -2- 2006, நிலை 2) வேதன அளவுத் திட்டத்தின்படி மாதாந்த வேதனம் மாதமொன்றுக்கு ரூபா 25,515 - 4 x645 - 8 x 650 - 16 x 1,050 - ரூபா 50,095.

(ii) *டிப்ளோமா பட்டமுடையவர்களுக்கு:* முன்னைய மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுவது மாதாந்தம் ரூ. 23,250 நிரந்தர மாதாந்த சம்பளம் ஆகும்.

2. **வயது எல்லை** .- 2007.04.20 ஆந் திகதி வயது 45 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

3. **கல்வி உட்பட ஏனைய தகைமைகள்** .-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். மற்றும்
(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆயுள்வேத, சித்த யூனானி மருத்துவக்கலை தொடர்பாக ஐந்து ஆண்டு பாடத்திட்டத்துக்கமைய பெற்றுக் கொண்ட பட்டத்தின் பின்பு ஒருவருட கால உள்ளகப் பயிற்சியை முடித்து ஆயுள்வேத வைத்தியசபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியராயிருத்தல்.

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத கல்வி நிறுவனமொன்றில் ஐந்தாண்டு பாடநெறியினை பயின்று ஆயுள்வேத, சித்த அல்லது யூனானி மருத்துவக்கலை தொடர்பாக டிப்ளோமா சான்றிதழொன்றினைப் பெற்றுக் கொண்ட பின்னர், ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல்.

(ஈ) சிறந்த நன்நடத்தையும், தேக ஆரோக்கியமும் சிறந்த கண்பார்வையுமுடையவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- அனுமதிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, சகல தகுதிகளையுமுடைய ஆயுள்வேத, சித்த, யூனானி மருத்துவர்கள் போதுமான அளவில் காத்திருப்போர் நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்காதவிடத்து அத்தகைய வெற்றிடங்களை ஆயுள்வேத/சித்த/யூனானி டிப்ளோமா பெற்றவர்கள் மூலம் நிரப்புதல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதும், விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள வேண்டியதும், மூன்று வருடகால தகுதிகாண் காலத்தை உள்ளடக்கியதுமாகும்.

5. **பதவி உயர்வு**.- ஆரம்ப தர பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்பு இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் நியதிச் சட்டடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை நியமனங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப பதவியுயர்வுகள் வழங்கப்படும்.

**குறிப்பு**.-(i) 2007.04.20 ஆந் திகதியன்று பதவியில் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும், பூரணப்படுத்திய, ஆயுள்வேத/சித்த/யூனானி இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்துள்ள, இதுவரை அரச சேவையில் நியமனம் பெறாத முதற் குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வைத்தியர்களும், இறுதிப் பட்டப் பரீட்சையில் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில், திறமை அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் வரிசையில், அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் எண்ணிக்கையில் காட்டப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்து வரும் ஆண்டுகளில் எஞ்சிய குழுக்களிலுள்ள ஆயுள்வேத/சித்த/யூனானி பட்டதாரி மருத்துவர்கள், அவர்கள் சித்தியடைந்து பதிவு செய்த கால அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்.

(ii) டிப்ளோமா சான்றிதழ்களை உடைய ஆயுள்வேத வைத்தியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தெரிவு செய்யும் வைத்தியர்கள் அவர்கள் வைத்தியர்களாக பதிவு செய்த இடாப்பின் எண் அடைப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) எனினும் மேற்குறிப்பிட்ட ஆட்சேர்த்துக் கொள்ளல் திட்டமும், மேற்குறித்த தீர்மானங்களும் (ஒழுங்கு விதி) மாற்றப்பட்டு அமைச்சரவையினால் வேறோர் தீர்மானம் பின்னர் எடுக்கப்படின் அது இவ் ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் தீர்மானத்தையும் விட மேலோங்கியதாக இருக்கும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் எண்ணிக்கையில் 75 வீதமான பட்டதாரி ஆயுள்வேத, சித்த, யூனானி வைத்தியர்களையும் மிகுதி 25 வீதத்திற்கு டிப்ளோமா ஆயுள்வேத, சித்த, யுனானி வைத்தியர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் நிரப்பப்படும்.

(v) 924/2 ஆம் இலக்க 1996 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவையின் நியதிச் சட்டத்தின் இலக்கம்10 :1: 10 ஆக மாற்றீடு செய்யப்பட்டுள்ள பிரிவின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 23.08.2002 ஆந் திகதிய வர்த்தமானியில் 1 ஆம் பிரிவில், 1 ஆம் பந்தியில் அறிவிக்கப்பட்டுள்ள மொத்த அனுமதிக்கப்பட்டுள்ள பணியாட் குழுவினுள் சித்த/ஆயுள்வேத/யூனானி வைத்தியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதன் பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளும் தகைமைகளின்படி வெற்றிட பதவி எண்ணிக்கைகளின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொழுது ஏற்புடையனவாக கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் நிச்சயிக்கப்பட்டதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

7.தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்ற தயாராகவிருக்க வேண்டும்.

8.கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் கேட்கப்படுமிடத்து சமர்ப்பிக்கப்படுவதற்கு விண்ணப்பதாரர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பட்டம் /டிப்ளோமா சான்றிதழ் ;
(iii) அனுபவம் தொடரபான சான்றிதழ் ;
(iv) ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் ;
(v) பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டுள்ள கிராம அலுவலர் சான்றிதழ்.

9. அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் யாவும் தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2007.04.20 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அல்லது அது தொடர்பான அனைத்து ஆவணங்களும் ஆயுள்வேத ஆணையாளரின் பதவிப் பெயருக்கு அன்றி வேறு எந்த அலுவலரின் பெயருக்கும் அனுப்புதல் கூடாது.

10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் உள்ளவாறு அரசாங்க சேவைப் பதவிகளுக்கு செய்யப்படும் நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகள், உங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின்படி,
அசோக மாலிமகே,
செயலாளர்,
தேசிய வைத்திய அமைச்சு.

தேசிய வைத்திய அமைச்சு,
பழைய கோட்டை வீதி,
நாவின்ன,
மகரகம.
2007.03.

**சுதேச வைத்திய அமைச்சு**

*இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் ஆயுள்வேத திணைக்கள வைத்திய அலுவலர் பகுதியின் ஆரம்ப தர வைத்திய அலுவலர் பதவி*

1. முழுப்பெயர் :-----.

2. முகவரி :-----.

3. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

2007.04.20 ஆந் திகதியில் வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி :-----.

5. இனம் (சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர், வேறு) :-----.

6. வதிவிடத்திற்குரிய
மாகாணம் :-----.
மாவட்டம் :-----.
பிரதேச செயலாளர் பிரிவு :-----.

7. திருமணமானவரா, திருமணமாகாதவரா என்பது பற்றி :-----.

8. கல்வி தொழில் நுட்பத்தகைமைகள் :-----.

9. பிரதேச பயிற்சி பெற்ற நிறுவனமும் வருடமும் :-----.

10. ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்த இலக்கமும் வருடமும் :-----.

11. அனுபவம் பற்றிய விபரங்கள் :-----.

12. பட்டம்/டிப்ளோமா தேர்ச்சியடைந்த வருடம் :-----.

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதி மொழிகின்றேன். நான் ஆயுள்வேத வைத்திய அலுவலராக நியமிக்கப்பட்டதின் பின்னர், இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள், பொய்யானது அல்லது பிழையானது என்று நியமன அலுவலர் அறிந்து கொண்டால், அக்காரணத்தினால் நான் இப்பதவிக்கு தகுதியற்றவராக கருதப்பட்டு எவ்வித இழப்பீடுகளுமில்லாமல் இச்சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

...........,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை**

மேற்குறித்த விபரங்கள் யாவும் சரியானவை என்றும், அவரின் வேலை மற்றும் நடத்தை ............ எனவும் சான்றுபடுத்துகின்றேன். தற்போதுள்ள பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

...................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :-----.

திகதி :-----

3-732

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.